பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் தமிழ்

*478 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாலிடெக்னிக்குகளில் தமிழைப் போதனாமொழியாக்கும் திட்டம சோதனை அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

*479 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that the Government Polytechnic at Thuvakudi near Tiruchirappalli has been selected for the introduction of Tamil medium from the current academic year; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி அரசினர் பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும் பொள்ளாச்சி நாச்சிமுத்து பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும் தமிழில் பாடங்களைப் பயில்விக்கும் திட்டம் 1974–75-ம் ஆண்டு முதல் செயலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. பௌதிகமும் (Physics) தொழில் நுட்ப ஓவியமும் (Technical Drawing) தமிழில் கற்றுக் கொடுக்கப் படுகின்றன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பாலிடெக்னிக் பள்ளிகளுக்குப் பயன்படும் வகையில் தமிழில் தொழில் நுட்பச் சொல் அகராதி ஒன்றினைத் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பல்தொழில் நுட்பப் பயிலகங்களுக்குப் பயன்படுகிற வகையில் பாடப் புத்தகங்களைக் கொண்டு வரும் முயற்சியில் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் ஈடுபட்டுள்ளது. தேவைப்படுமானால் பல்தொழில் நுட்பப் பயிலகம், பொறியியல் கல்லூரிகள்இவற்றுக்குப் பயன் படுகிற சொற்களைத் தொகுக்க தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் நடவடிக்கை மேற்கொள்வார். இப்பொழுதே கலைச் சொற்கள் அகராதி ஒன்று இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: இந்தத்திட்டத்தை மற்றப் பள்ளிகளுக்கும் விஸ்தரிக்கக்கூடிய திட்டம் சர்க்காரிடம் இருக்கிறதா? அது எத்தனை வருஷத்தில் அமல் செய்யப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திருச்சியிலும், பொள்ளாச்சியிலும் இது பரிட்சார்த்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு முழுவதும் பார்த்து விட்டு, இதனால் ஏற்படுகிற பலாபலன்களை அறிந்து வேறு பல துறைகளிலும், பள்ளிகளிலும் இதை விரிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது.